**ஆ எல்லாவு சொந்தத்தா**

அட்டிகோ எல்லா எங்க அட்டித்தா, ஆ எல்லாவு சொந்தத்தா
ஒள்ளித்து ஒல்ல ೦பேரெ ஆ எந்த ೦பப்பதில்லெ
அருக்கலு ஆருதலு ೦பேரெ ஆ தப்பதில்லெ
சாவது ஏநோ ஒசத்து அல்ல! ೦பதுக்கு
சோக்கு எந்து சந்தோச படுவது இல்லெ
அதுந ೦பேடாந்து ೦புட்டு ஒப்பது இல்லெ
೦பெட்டுநொ ஊத மே எந்த ஓடி ೦பப்ப
೦தொ೦ட೦ட ஒளெயொ ஓப்ப தெப்ப மாக்கெ
அதுந ஓட்டக ஓடுவ உசுரு ೦பதுக்குவது எந்து
நாயகாரரு தந்த அரிவு எந்த தீதியொ
அதுநெந்த ೦தொ೦ட೦டதநதோகெ
ஹிரியர நோடி ஆச்சரிய பட்டது இல்லெ
அதுகு மேலெ கிரியர கேவல மாடிதது இல்லெ
(படகு மொழிபெயர்ப்பு: இரா.கு.ஆல்துரை)

**யாதும் ஊரே**

யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும், நன்றும், பிறர் தர வாரா;
நோதலும், தணிதலும், அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றேவாழ்தல் !
இனிது என மகிழ்ந்தன்றும் இலமேமுனிவின் !
இன்னாது என்றலும் இலமேமின்னொடு !
வானம் தண் துளி தலைஇ ஆனாது,
கல்பொருது இரங்கும், மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புனை போல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே!
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

(கணியன் பூங்குன்றனார்: புறநானூறு -192)

பொருள்:

எல்லா ஊரும் எம் ஊர் எல்லா மக்களும் எம் உறவினரே
நன்மை தீமை அடுத்தவரால் வருவதில்லை
துன்பமும் ஆறுதலும்கூட மற்றவர் தருவதில்லை
சாதல் புதுமை யில்லை; வாழ்தல்

இன்பமென்று மகிழ்ந்தது இல்லை
வெறுத்து வாழ்வு துன்பமென ஒதுங்கியதுமில்லை
பேராற்று நீர்வழி ஓடும் தெப்பம்போல
இயற்கைவழி நடக்கும் உயிர்வாழ்வென்று
தக்கோர் ஊட்டிய அறிவால் தெளிந்தோம்
ஆதலினால், பிறந்து வாழ்வோரில்
சிறியோரை இகழ்ந்து தூற்றியதும் இல்லை
பெரியோரை வியந்து போற்றியதும் இல்லை.

**All towns are one**

To us all towns are one, all men (human) our kin,
Life's good comes not from others' gifts, nor ill,
Man's (human) pains and pain's relief are from within,
Death's no new thing, nor do our bosoms thrill
When joyous life seems like a luscious draught.
When grieved, we patient suffer; for, we deem
This much-praised life of ours a fragile raft
Borne down the waters of some mountain stream
That o'er huge boulders roaring seeks the plain
Tho' storms with lightning's flash from darkened skies.
Descend, the raft goes on as fates ordain.
Thus have we seen in visions of the wise!
We marvel not at the greatness of the great;
Still less despise we men of low estate.

(Translated by G.U.Pope, 1906)